**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S.SRI VARI INFRASTRUCTURE, LEASE OVER AN EXTENT OF 2.95.0 HA LOCATED AT SF.NO. 637(P) AND 4(P), THUPPUGANAPALLI & AGARAM AGRAHARAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 26.07.2023 AT 12.00 PM AT M/S. SAS MAHAL, KEEL THERU, BERIGAI ROAD,SHOOLAGIRI TALUK,KRISHNAGIRI DISTRICT – 635 117.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. V. Deenadayalan | : | Assistant Engineer,<br>(District Environmental Engineer (a/c)),<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er.K.Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Er.A.Vinodhini | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 5 | Thiru. Adal Arasu | : | The Proponent<br>M/s. Sri Vari Infrastructure |
| 6 | Thiru.P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 57 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer(a/c), Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the

general public and project proponent who have attended the public hearing for the proposed project of M/s.Sri Vari Infrastructure Lease over an Extent of 2.95.0Ha Located at SF.No. 637(p) and 4(p), Thuppuganapalli & Agaram Agraharam Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 22.06.2023 and bit notices regarding public hearing was issued to the public of Thupuganapalli Village, T.Gurubarapalli, Agaram Agraharam Village, Anjalagiri Village, Chinnabellagondapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer(a/c), Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer (a/c), Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. T.Kishore, T.Gurubarapalli Village:**

Thiru. T.Kishore has said that, heavy vehicles carrying stones from the quarry should not be driven on the road located nearer to the school between 8.30 am to 9.30 am in the morning and 4.00 pm to 5.00 pm in the evening. Also, heavy vehicles should be fully covered while carrying stones from the quarry. Further, he informed that, blasting should be carried out only at night and should not be carried out during the day. Finally, he requested that, the local people should be given employment opportunities.

**EIA Consultant of the proposed project:**

Environmental Impact Assessment Consultant said that, the heavy vehicles will be completely covered while carrying stones from the quarry and we ensure that there shall be no truck movement during school opening and closing hours. He also informed that, about 40 local people will be employed as labourers in the quarry work and 14 people are required for office work and among them local people will be given priority. He also said that, people who have degrees in mining engineering and geology will be selected and employed in the mining projects of the quarry through an interview based on their qualifications. In addition to that, that local people with degrees in mathematics will be given the opportunity to work in the field of accountancy.

**The District Environmental Engineer (a/c), TNPCB, Hosur :**

The District Environmental Engineer (a/c), TNPCB, Hosur has asked the public to raise their hands if there was any objection to the proposed quarry project. Then, she recorded that there was no objection to the proposed quarry project as no one from the general public raised their hands.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer(a/c), Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, there is no petitions were received on the proposed M/s. Sumukha Blue Metals & Blocks LLP Rough Stone Quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer(a/c)**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Sub Collector**<br>**Hosur**<br>4/7 | **District Collector**<br>**Krishnagiri**<br>4/7 |

**திஃஎ். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர், சர்வே. எண். 637 (பகுதி), 4 (பகுதி), துப்புகானப்பள்ளி மற்றும் அகரம் அக்ரஹாரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.95.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 26.07.2023 அன்று பேரிகை ரோடு, கீழ் தெரு, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/எ். S.A.S மஹால், நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. V. தீனதயாளன் | : | உதவி பொறியாளர்,<br>(மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கூ.பொ,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர்) |
| 3 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.A. வினோதினி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 5 | திரு.R. அடல் அரசு | : | உரிமையாளர்<br>தி/எ். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் |
| 6 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/எ்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 57 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் ரப் ஸ்டோன் குவாரிக்கு அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூடுதல் பொறுப்பு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.06.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், துப்புகானப்பள்ளி, T.குருபரப்பள்ளி, அகரம் அக்ரஹாரம், அஞ்சலகிரி, சின்ன பெலகொண்டப்பள்ளி ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூடுதல் பொறுப்பு) அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. T. கிஷோர், T.குருபரப்பள்ளி கிராமம்:**

திரு. T. கிஷோர் அவர்கள், குவாரியிலிருந்து கற்களை ஏற்றி வரும் கனரக வாகனங்களை பள்ளி அருகில் அமைந்துள்ள சாலையில் காலை 8.30 முதல் 9.30 வரையிலும், மாலை 4.00 முதல் 5.00 மணி வரையில் இயக்க கூடாது என்று தெரிவித்தார். மேலும், கனரக வாகனங்கள் குவாரியிலிருந்து கற்களை ஏற்றி

செல்லும் போது முழுவதுமாக மூடி செல்ல வேண்டும். இரவு நேரங்களில் மட்டுமே வெடி வைக்க வேண்டுமென்றும், பகல் நேரத்தில் வெடி வைக்க கூடாது என்று தெரிவித்தார், இறுதியாக, உள்ளூரில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி உதவிட வேண்டும் என்று கூறினார்.

**குவாரியின் சார்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகரின் பதில்:**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் அவர்கள் கனரக வாகனங்கள் மூலம் குவாரியிலிருந்து கற்களை ஏற்றி செல்லும் போது முழுவதுமாக மூடி செல்வதையும், பள்ளி நேரங்களில் கனரக வாகனங்களை இயக்காமல் இருப்பதையும் உறுதி செய்வோமென்று கூறினார். மேலும், குவாரி பணிகளில் சுமார் 40 நபர்கள் சுமை தூக்கும் தொழிலாளர்களாக உள்ளூர் நபர்கள் பணியமர்த்தப்படுவர்கள் என்றும், 14 நபர்கள் அலுவலக பணிகளில் தேவைப்படுவதாகவும் அவர்களில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்தார். மேலும், சுரங்க பொறியியல், புவியியல் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற நபர்களின் தகுதியை பொருத்து குவாரியின் சுரங்கத் திட்டப் பணிகள் போன்றவற்றில் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து பணியமர்த்தப்படுவர் என்றும் கூறினார். மேலும், கணிதத்தில் பட்டம் பெற்ற உள்ளூர் நபர்களுக்கு கணக்குப்பதவியியல் துறையில் பணியாற்ற வாய்ப்பளிக்கப்படும் என்று கூறினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூடுதல் பொறுப்பு), ஓசூர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூடுதல் பொறுப்பு) அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்திற்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் கைகளை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு பொது மக்கள் யாரும் கைகளை உயர்த்தாத காரணத்தினால், இக்குவாரி திட்டத்திற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை பதிவு செய்தார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூடுதல் பொறுப்பு) அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து எந்த மனுவும் பெறப்படவில்லை.

மேலும், தி/ள். ஸ்ரீ வாரி இன்ப்ராஸ்ட்டச்சர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ/பொ)<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | சார் ஆட்சியர்<br>ஓசூர் | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |